அக்டோபர் 1, 2013

# இந்திய ஆன்மீகமும் மகான்களும்

மனித வரலாறு, மனம் வளர்ந்த வரலாறு. ஜடம் சிருஷ்டிக்கப்பட்டது போலுள்ளது. தாவர வாழ்வு தரையை விட்டகலாத வாழ்வு. விலங்கினம் ஊர்வன, பறப்பன, நடப்பனவாகும். மனித வாழ்வு மாற்றமுடையது. மாற்றம் அவன் பெற்ற மனத்தால் ஏற்படுவது. மனிதக் கூட்டத்திற்குத் தலைவருண்டு. விலங்குகளும் ஒரு தலைவரை ஏற்கின்றன. அவன் வழிப்படி நடக்கின்றன. தலைவன் என்ற நிலை தாவர, ஜட வாழ்விலில்லை. சிறந்தது, உயர்ந்தது. அதற்குரியது தலைமைப் பதவி. விலங்குகளில் பெரியது தலைமையை ஏற்கும். சிங்கம் பெரியதாக இல்லாவிட்டாலும் அதன் சுபாவத்தால் தலைமைக்குரியது. மனிதர்களிலும் உயரமானவனுக்கு, பெரிய வலுவுள்ளவனுக்குத் தலைமை பெரும்பாலும் உண்டு. உடல் பெரிதாக இருப்பது வேறு, வலிமை வேறு. வலிமை வேறு, வலிமையைத் தலைமையாய் பயன்படுத்தும் திறன் வேறு. ஆதி நாளில் ஒரு கூட்டம், அடுத்ததை சந்தித்தால் கைகலக்கும், சண்டையெழும், போர் தொடுப்பார்கள். உடலால் இணைய விரும்பினால் சண்டையிட்டு ஜெயிப்பவரைத் தலைவராக ஏற்பது உடலின் சுபாவம். இந்து முஸ்லீம் கலவரம் 1946-1948 இல் நடந்தவையின் ஆன்மீக அடிப்படை, ஆழ்ந்த ஒற்றுமையை நாடும் பாணியெனப்படும். நூற்றுக்கணக்கான வருஷங்களாகப் போர் மலிந்த ஐரோப்பா EU என ஐக்கியப்பட்டது ஆன்மீக சட்டம் தன்னை விளக்குவதாகும். ஆன்மீகம் சொல்லெழுப்பாமல் அழுத்தம் திருத்தமாகக் கூறுபவை:

உலக வாழ்வின் அடிப்படை ஒற்றுமை.
நாள் செல்லச் செல்ல நாடுகள் ஒன்றுபட வேண்டும்.
சமாதானமாக இணையாத நாடுகள் வியாபாரத்தால் இணையும்.
பொதுவாக மொழியால் பிணைக்கப்பட்டு ஒன்றுபடும்.
பண்பு, மதம் மக்களை இணைக்கும் உபாயங்களாகும்.
எவ்வகையாகவும் இணையாதவர் போரால் ஒன்று சேருவர்.

சேனைக்குத் தலைவன் சேனாபதி. போர் முடிந்து இராஜ்ஜியம் ஏற்பட்டால் சேனாபதி அரசனாவான். 70 ஆண்டு பகையை பாராட்டிய ரஷ்ய நாடுகள் இன்று நட்பு பாராட்டுகின்றன. அமெரிக்காவில் தென் மாநிலங்கள் பிரபுக்களிடமிருந்தன. அவர்கள் பண்ணைகள் நீக்ரோ அடிமைகளால் பயிரிடப்பட்டது. சுதந்திரம் வேண்டி ஐரோப்பியர் உற்பத்தி செய்த புது உலகம் அமெரிக்கா. ஐரோப்பாவில் போப்பாண்டவர் ஆட்சி செலுத்தினார். குறிப்பாக கத்தோலிக்க சர்ச்சின் ஆதிக்கத்தினின்று விடுபட்டு மத சுதந்திரம் அனுபவிக்க முயன்றவர் வந்து குடியேறிய நாடு அமெரிக்கா. பிராடஸ்டண்ட் மதப்புரட்சித் தலைவர். வெள்ளையர் ஆங்கிலோ சாக்ஸன் இனத்தவர் பிராடஸ்டண்ட் WASP ஆல் நிரம்பிய ஜனத்தொகை அமெரிக்க இனம். இவர்கள் மத சுதந்திர வீரர்கள். ஐரோப்பிய பிரபுக்களிடமிருந்தும், போப்பாண்டவர் சட்டத்திலிருந்தும் புரட்சி செய்து வந்த WASP மக்களில் Puritans, Quakers என்ற பகுதியினர் பைபிளைத் தூய்மையாகக் கருதி அதன் சொல்லை வேதவாக்காக் கொள்பவர். இவர்கள் அனைவர்க்கும் சுதந்திரம் உயிர் மூச்சு. அமெரிக்காவில் இராணுவமில்லை, போலீஸில்லை, மதக்கட்டுப்பாடில்லை, கொத்தடிமை அழிக்கப்பட்டது. இவ்வளவும் உள்ள சுதந்திர நாட்டில் இலட்சக்கணக்கான நீக்ரோக்கள் அடிமையானார்கள். 19ஆம் நூற்றாண்டில் அடிமை வாழ்வை அழிக்க நாடு முனைந்து, அதன் விளைவாக உள்நாட்டுப் போர் நடந்து சட்டப்படி அடிமை அழிக்கப்பட்டு, ஐம்பத்திரண்டு மாநிலங்களும் 1865இல் ஒன்றாயின. போரில் இறந்தவர் ஏராளம்.

மக்கள் கூட்டம் இணைய அவர்கள் சண்டையிட்டு மாய்வது
உலகம் அறிந்த உண்மை.

இப்போராட்டத் தலைவன் ஆப்ரஹாம் லிங்கன். உடல் வாழ்வின் தலைவருக்குச் சேனாபதி எனவும், உயிரின் தலைவனை அரசன் எனவும், ஆத்மாவின் தலைவனை மகான் எனவும் உலகம் கூறும். உலகிலேயே மகான்கள் நிறைந்த நாடு இந்தியா. வேத காலத்து ரிஷிகள் வசிஷ்டர், விஸ்வாமித்திரரை நாடு இன்றும் போற்றும். உபநிஷத காலத்து எழுந்த மகான்கள் ஏராளமானவர். என்றாலும் வேத ரிஷிகள் பெற்ற பிரபலம் அவருக்கில்லை. கபிலர், சாங்கியர் பெயர் இன்றும் உலவினாலும், உபநிஷதங்கள் பெற்ற பிரபலம் அதைக் கண்ட ரிஷிகட்கில்லை. புத்தர் அவர்களை அடுத்து வந்தவர். அவர் காலத்தையொட்டி, அவர் மதத்தையொட்டி எழுந்த ரிஷிகள், முனிவர்கள், தவசிகள், திர்த்தங்காரர்கள்/தீர்த்தங்கரர்கள் ஏராளம்.

மகான்கள் நிறைந்த மலை நாடு வடநாடு.

மேல் நாட்டு ஆன்மீக சிகரம் ஏசுநாதர். பகவான் குறிப்பிடும் உலக வரலாற்றின் மாபெரும் 4 ஆன்மீக மைல் கற்களில் ஒன்றாக ஏசு சிலுவையிலறையப்பட்டதைக் குறிப்பிடுகிறார். இயற்கை மேல் நாட்டில் மனத்தை

வளர்த்தது. மனத்தின் சிறப்பான அழகுணர்ச்சிகள் மூன்று. அழகு, அன்பு, ஆனந்தம் ஆகியவை. சச்சிதானந்தத்தில் அன்பு பவருக்குப் பின் வருவது. அன்புக்கு சொந்தமாக தெம்பில்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. யாருக்கு சேவை செய்ய வந்தாரோ, அவர்களே ஏசுவை சிலுவையிலறைந்தனர். இது சிருஷ்டியின் இரகஸ்யங்களில் ஒன்று. சிருஷ்டியில் சச்சிதானந்தம் தனக்கு எதிரானதில் மறைந்துள்ளது என்பது அடிப்படை. எதிரானதுள் மறைந்தது எப்படியும் வெளி வரும். அதுவே பரிணாமம். நாட்டு வழக்கில் கலகத்தைப் பற்றியும், ஆவாதவனைப் பற்றியும் மக்கள் அறிந்த உண்மையிது. மனித வாழ்வில் தவறாது நிகழ்பவை, பெரும்பாலுமில்லை. *Pride and Prejudice* இல் பரவாயில்லை என்றும், நான் டான்ஸ் ஆட மாட்டேன் என்றும், ஜேன் திருமணத்தை தடை செய்த டார்சியே லிடியாவைக் கண்டு பிடித்தான். ஆபத்தில் அவனே உதவினான். நாம் வாழ்வைக் கவனிப்பதில்லை. கவனித்தால் புரிவதில்லை. நாட்டு அரசியல், சொந்த வாழ்வு பாரதத்தில் நாமறிந்த கதைகள், இன்று நாம் படிக்கும் கதைகள், கேள்விப்படும் உண்மை நிகழ்ச்சிகளை சற்று கூர்ந்து கவனித்தால், இந்த ஆன்மீக உண்மை தெளிவாகத் தெரியும். அன்னை ஏசுநாதரை சிறு அவதாரம் (minor avatar) என்கிறார்.

விஸ்வாமித்திரர் அரசன், துறவியானார். திரிசங்கு ராஜ்யத்தைத் துறந்து சொர்க்கம் போக முயன்றார். பத்ரகிரி ராஜ்யத்தைத் துறந்து துறவறம் பூண்டார். உலகில் அரச பதவி பெரியது. அதற்குரியது சிம்மாசனம். ராஜா பதவியைத் துறந்தார் என உலகில் சரித்திரம் உண்டா? அரச பதவியைத் துறந்து பெறும் பேறுள்ளது துறவறம் என்பதை நம் நாட்டில் பல பெரிய நிகழ்ச்சிகள் கூறுகின்றன. உடல் நலம், அரச பதவி, பணம் மூன்றும் கடவுள் விருப்பம் உலகில் நிறைவேற தேவை என்று கூறிய பகவான், நாமே அரசனாக இல்லாமல் இறைவனுக்கு சேவை செய்ய முடியாது என்றார். உடல் நலம் பேணும் முறை எளியது. பண விஷயம் தனக்குத் தெரியாது என்றார். உடனே அன்னை தியானத்திலாழ்ந்து பணத்தின் இரகஸ்யத்தை அறிய முயன்றார். தியானம் பாதாளம் அழைத்துச் சென்றது. சூட்சும உலகில் உலகம் உற்பத்தியானதிலிருந்து அவ்வரலாற்றை சூட்சும நினைவாகப் பெற்ற லோகம் உண்டு. அங்கு போனால் அவ்விவரங்களை அறியலாம் என்று அன்னை வேறொரு சமயம் எழுதியுள்ளார். ஆன்மீகம், மாந்திரீகம், தந்திரம் என்பவை ஏராளமாக வேறுபட்டவை. பகவானுடைய ஆன்மீக வாழ்வில் சூட்சுமம் (Subtle, occult) என்ற துறைகளை அவர் முக்கியமாகக் கருதவில்லை. தானே தெளிவு பட்டவற்றையே அவர் அறிவார். ஆரம்ப நாளிலிருந்து ஆன்மீகம் என அன்னை அறிந்தவை அனைத்தும் சூட்சும இரகஸ்யங்களே. உடலை விட்டு வெளியே வந்தபின் உள்ள சூட்சும உடலை விட்டும் வெளியேறும் திறனும் அன்னைக்குண்டு. அவர் பாதாளம் சென்றடைந்தபொழுது பூமியின் செல்வமனைத்தும் அங்கிருக்குமிடத்தை அடைந்தார். அதன் வாயிலில் காவலுக்கு கரும் மலைப்பாம்பு வைக்கப்பட்டிருந்தது. அது அன்னையை தடுத்து விட்டது. "புவியில் எவருக்கும் காம உணர்ச்சி அழிந்து போனால் என்னைக் கடக்கும் உரிமை உங்களுக்குண்டு" என்று கூறியது. "என்னை மீறி நீங்கள் என்னைக் கடந்து சென்றால் நான் கொல்லப்படுவேன்" என்றும் கூறியது. It is global wealth. அப்படிப்பெறுவது பூமாதேவியின் செல்வம்.

வேதம் முதல் ஸ்ரீ அரவிந்தம் என்பது காலத்தின் மூலத்திலிருந்து சிருஷ்டியின் சிகரமான காலத்தின் முடியை அடைவதாகத் தெரிகிறது. வேதம் எனில் அதன் வாக்கு இந்திய ஆன்மீகப் பண்பாட்டிற்கு வேத வாக்காகும். ஆரியர் மத்திய ஆசியாவினின்று வந்தவர். உலக நாகரீகம் உற்பத்தியான இடம் மெசபொட்டேமியா. அங்கு வாழ்ந்தவர் ஆரியர் எனப்பட்டனர். நாம் ஆரியன் என்ற சொல்லை சிரேஷ்டமான சீரியன் என்று வழங்குகிறோம். பகவான் யோகத்தை மேற்கொண்டு புதுவையில் இறைவன் ஆணையை பூர்த்தி செய்தாரெனினும் அவர் மனம் இந்திய விடுதலை, தேசீய காங்கிரஸ், நாட்டின் எதிர்காலம் எதிர்காலம் எழுப்பக்கூடிய புதிய உயர்ந்த பண்பின் எழில் மிக்க உருவம் ஆகியவற்றுள் திளைத்திருந்தது. பூரணமாக பகவானையும் அன்னையையும் உளமார ஏற்றவர் மனம் மனைவி மக்கள், கணவன் குடும்ப நலத்தை அப்படிக் கருதுவதை நாம் அறிவோம். காங்கிரஸ் இயக்கங்கள், காங்கிரஸ் ஸ்தாபனம், காங்கிரஸ் மாநாடுகள், காங்கிரஸ் தலைமை — பகவானை காங்கிரஸ் தலைமை வகிக்கும்படி ஒரு முறை வேண்டுகோள் எழுந்தது — அத்தலைவர்களின் சுபாவம், வலிமை, இலட்சியம், அவர்களுடைய 'ஆன்மீக ஜாதகம்' பகவான் விரும்பியவற்றில் தலையாய இடம் பெற்றது. பிறந்த வங்காளத்தில் அவர் சில ஆண்டுகளே வாழ்ந்தாலும் — ஒன்று முதல் ஏழு வயது வரை ஏழு ஆண்டும் 1906 முதல் 1910 வரை நான்கு ஆண்டுமாக பதினோரு ஆண்டு வாழ்ந்தார். குஜராத்தில் பதிமூன்று ஆண்டிருந்தார் — அவர் மனம் வங்காளம், வங்காளியால் நிறைந்திருந்தது. வங்காளி நாட்டை ஆளும் திறமை பெற்றவன் எனக் கூறியுள்ளார். ஒரு முறை காங்கிரஸ் தலைமையைப் பற்றிக் கூறியபொழுது அங்கு பட்டேலுக்குத் தான் வலிமையுண்டு என்றார். நேருவை சீரியனான ஆரியன் perfect type of Aryan என்று வர்ணித்தார். வேதம் எழுதப்பட்ட மொழியை massive, rich, cryptic கனத்த செறிந்த மொழி சுட்டிக் காட்டும் சுடரென ஒளி விடும் மொழி என்கிறார். வேதம் மூன்று அல்லது நான்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன் எழுந்தது என்பது ஆராய்ச்சியாளர் கூறுவது. பகவான் அதை மறுக்கவில்லை எனினும் ஏற்கவில்லை. வானில் நட்சத்திர பவனியை பகவான் அறிவது மனம் பெற்ற அறிவாலல்ல. ஆத்ம திருஷ்டியின் தெளிவு அது. அது போல் அவரறிந்தவற்றை பகவான் விவரமாக எழுதவில்லை. பொருளாதாரத்தைப் பற்றி பகவானுக்குப் பல கருத்துகள் உண்டு. அவற்றை அவர் வெளியிடவில்லை என அன்னை கூறுகிறார். 19ம் ஆண்டு தொழில் (industrialisation) அபிவிருத்தியை பகவான்

அசுரத்தனமானது என்று கூறியவர் விளக்கம் தரவில்லை. நட்சத்திர அசைவுகளை அவர் உணர்ந்தது போல் வேதம் 18,000 ஆண்டுகட்கு முற்பட்டது எனக் கூறலாம் என அவர் கருதியது பிற்காலத்தில் archives பழம் பெரும் ரிக்கார்டுகளில் உள்ளது.

பகவான் கூறிய பல சொற்கள் எளிய பக்தனுக்கு திகைப்பையூட்டும்.
அவற்றுள் சில:-

1. மன்னிக்க வேண்டும் எனில் யாரை மன்னிப்பது.
2. உலகின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டிய அவசியமில்லை.
3. புதுவையிலிருந்து மனைவியின் நோயைக் குணப்படுத்த வேண்டி அவரிடம் வந்தவரை "அது என் கடமையில்லை" என்றார். (அப்பெண்மணி பகவானை நாடியதால் மட்டும் குணமாகியிருப்பார் என்பது என் அபிப்பிராயம். விபரம் தெரியவில்லை).
4. அணுகுண்டுகள் வீசப்பட்ட பொழுது 1945 ஆகஸ்டில் பகவான் என்ன கூறினார் எனத் தெரியவில்லை.
5. விஞ்ஞானியின் மூட நம்பிக்கைக்கும் விவசாயியின் மூட நம்பிக்கைக்கும் வித்தியாசமில்லை என்ற பொருள்பட பேசுகிறார்.
6. அவர் வீட்டில் மந்திரவாதி கல் வீசியபொழுது "அறிவுக்குரியவாறு பேசுவதனால் கல் விழுந்தது எனலாம். குட்டி தேவதைகள் போட்டன எனக் கூற முடியாது" என்றார்.
7. வங்காளம் கொடிய பஞ்சத்தால் வாடும்பொழுது "ஏன் பகவான் சும்மாயிருக்கிறார்" என வங்காள சாதகர்கள் கேட்டார்கள். "உதவி கேட்டால் கிடைக்கும்" என்றார்.

பகவான் கூறியவை வேதவாக்கு. அவற்றைப் புரிந்து பின்பற்றுவது மனிதனுக்கில்லை. புரியாமலும் பின்பற்ற முடியாது. "நம்மையெல்லாம் பகவான் பொறுத்துக் கொள்கிறார்" என அன்னை குறிப்பாகத் தன்னைச் சொல்கிறார். "அன்னை சத்திய ஜீவியத்துள் தலைவாயிலால் நுழைந்தார். நான் பின்பக்க கதவால் நுழைந்தேன்" என்கிறார். நம் பரம்பரை குருவின் வாக்கு வேத வாக்கு. விளங்க வேண்டிய அவசியமில்லை. வேத கால பாஷை மௌனம். போதனை என்பது சொல்லாலல்ல. சிஷ்யன் மௌனமாக குருவின் ஞானத்தை (subliminal) அடிமனத்தால் பெற வேண்டும். அதிக பட்சம் குரு கடைசிகாலத்தில் தன் வாழ்வில் சேகரம் செய்த அத்தனை ஆன்மீக வலிமைகளையும் ஓர் மந்திரமாக எழுதி இரகஸ்யமாக உபதேசிப்பார். இந்த மந்திரம் சிஷ்யனால் பிறருக்குக் கொடுக்கப்படக் கூடாது. குருவின் உத்தரவின் பேரில் செய்யலாம். குருவுக்குப் பின் உத்தரவு அசரீரியாக அந்தரங்கக் குரலாக எழ வேண்டும். பகவான் அவ்வசரீரியைப் பெற்றபின் குருவாக இருந்த லீலியின் கட்டளைகளை ஏற்கவில்லை. சில ஆண்டுகட்குப்பின் அந்த அசரீரியையும் பணியவில்லை. தம் தியானத்தில் நான்கு தெய்வங்களை அவர் கண்ட பொழுது, அவற்றுள் அவர் கேள்விப்படாத வேதக்கடவுள் ஒன்று. பிற்காலத்தில் அக்கடவுளும் வேதத்தில் வேறிரிடத்தில் கூறப்பட்டதை அறிந்தார். இந்தியாவில் ஏழு மாதம் பௌத்தரிடையே வாசம் செய்த Steve Jobs உலகப் பிரசித்தி பெற்றான். அந்த ஏழு மாதத்தில் தான் intuition நேரடி ஞானத்தின் உயர்வை அறிந்தேன் என்றான். Jobs எழுபது ஆண்டுகள் தவமிருந்து நேரடி ஞானம் பெற முடியாது. நேரடி ஞானம் ரிஷியைக் கடந்த யோகி பெறுவது. ரிஷி மௌனம் காக்கும் முனியைக் கடந்தவர். Jobsக்கும் மௌனத்திற்கும் தொடர்பில்லை.

மாடியில் க்ஷவரம் செய்யும் கணவனுக்கு கத்திபட்டு இரத்தம் வருவது தெரிவது உணர்வால் ஒன்றுபட்டிருப்பது. மழை வருவது எறும்புக்கு ஒரு நாள் முன் தெரியும். பூகம்பம் வரப்போவது குதிரை போன்ற விலங்குகட்கு இரண்டு நாள் முன்கூட்டித் தெரியும் என்பவை உணர்ச்சி. நாட்டில் உணவு உற்பத்தி பற்றாக்குறை நிலையைக் கடந்து உயர்ந்து விட்டது. இனி ரேஷனை எடுத்தால் விலைவாசி ஏறாது என்பது நேரடி ஞானம். நடிகர் ரசிகர் மனத்தை சினிமா எடுக்குமுன் அறிவதும், நாட்டு மக்கள் அரசியல் நாடியை எவரும் அறியாதபடி மகாத்மா அறிந்ததும் அவருடன் உணர்வால் தொடர்பு கொண்ட ஞானம். மலையிலும், காட்டிலும், நதியிலும் இறைவன் உறைவதை தம் உடலின் உணர்வால் வேத ரிஷிகள் உணர்ந்து மலையை இமவான் எனவும், கங்கையை கங்காதேவி என்ற ஜீவ நதியெனவும் கூறினர். அவர் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தனர். இறைவனை உணர்வால் அறிந்தனர். அவனை அழைத்து தம் வாழ்வில் செயல்பட முடியும் என்றும் அறிந்தனர். அது போல் பிரம்மா, விஷ்ணு, சிவன், லக்ஷ்மி, சரஸ்வதி, முக்கியமாகக் காளி, இந்திரன், முருகன், கணபதி போன்ற கடவுள்களையும் இளா போன்ற நான்கு கடவுள்களையும் அறிவர். மழை, காற்று, புயல், விலங்கு, விஷ ஜந்துக்களை தன் ஆன்மீகத் திறமையால் கட்டுப்படுத்த முயன்று வென்றனர். நம் இந்து பரம்பரையில் 14,600 மந்திரங்களுண்டு. இம்மந்திரங்கள் நம் செயல்களைத் தூய்மைப்படுத்தும். உடல்நலம் காக்கும், உறவை சிறப்பாக்கும், உணவை உற்பத்தி செய்யும், காணாத பொருளைக் கண்டு பிடிக்கும், மழையைப் பொழியச் செய்யும். எந்த மந்திரம் எந்த காலத்தில் உற்பத்தியாயிற்றோ, இத்தனை மந்திரங்களை இன்றும் சாஸ்திரிகள் அறிவார்கள். கடவுள்களை ரிஷிகள் அறிவார்கள். அவர்கள் பிறந்த இடமான சத்திய ஜீவியத்தை அறிவார்கள். சத்திய ஜீவியத்தை சத்யம், ரிதம், பிருஹத் என்றனர். அதன் குரலைக் கேட்டுள்ளனர். அதன் சத்திய ரூபத்தை ஆன்மீக வாழ்விலும், அன்றாட

வாழ்விலும் கண்டுள்ளனர். சத், சித், ஆனந்தமான சச்சிதானந்தத்தையும் அறிவர். அதையே பிரம்மம் எனவும் கூறினர். அதையடையும் மார்க்கங்களை — யாகம், யக்ஞம், மந்திரம், தவம் —அறிந்தனர். ஓர் ஆராய்ச்சியில் அக்கால சுலோகங்களைப் படித்து ஏர் என்ற சொல்லே அவர்கள் கருத்திலில்லை, வழக்கிலில்லை, நிலத்தை உழுது பயிரிட்ட சுவடில்லை என்று கண்டு அவர்கள் விவசாயம் செய்யவில்லை என்று முடிவு செய்தனர். அந்த நாள் பாஷை சுட்டிக் காட்டுவது. விளக்கமாக நேரடியாகச் சொல்வதில்லை, மரணப்படுக்கையில் தகப்பனார் மகனை நிழலிலே போ, நிழலிலே வா என்றார். அதாவது காலையிலும் மாலையிலும் நடப்பது அறிவுடமை என்று அப்படிக் கூறினார். ஆன்மீக இரகஸ்யங்களை வேதம் மறைபொருளாக சுட்டிக் காட்டியது. அதன் இரகஸ்யமறியாதவர் அவை அர்த்தமற்ற சொற்கள் எனக் கருதுவர். மொழி cryptic ஆனது என்று பகவான் கூறுகிறார். அவர்கள் சொல் கனத்தது. நாம் பேசும்பொழுது நினைவிலிருந்து பேசுகிறோம். ஆர்வமான விஷயத்தை உணர்விலிருந்து பேசுவதால் பேச்சு தீவிரமாக, ஆவேசமாக வருகிறது. பேச்சு உடலின் ஆழத்திலிருந்து வந்தால் சொல் கனமாக இருக்கும். காதில் விழும் ஒலி உடலைத் தழுவுவதைக் காணலாம். சொல் massive கனத்தது என்பது பகவான் விளக்கம். தூரத்தில் நிலத்திலிருப்பவனை அழைக்க கூவு என்கிறார்கள் கிராமத்தார். போன் வந்தபொழுது ring him என்பது ஆங்கிலம். I shall ring him என்ற சொல் போன் மணியடிப்பதால் வந்தது. அமெரிக்கர்கள் I shall call you என்று கூறுவது இன்று பழக்கமாயிற்று. செயலை சொல் பிரதிபலிக்கும். நாம் அழை எனக் கூறுவது கூப்பிடு என்று பொருள்படும். தமிழுக்கே உரிய ழை என்ற எழுத்து அழைப்பில் வருவது தமிழ்ப் பழக்கம். நெடுநாள் முன் வாழ்ந்த வேத காலத்தவர் மொழி இன்று நமக்குப் புலப்படாது. அன்னியரான ஆங்கிலேயருக்கு எளிதில் புலப்படாது.

ஆங்கிலேயர் சென்ற இடமெல்லாம் உள்ளூர் நாகரீகத்தை ஆராய்ந்தனர். G.U.Pope தமிழ் பயின்றார். தமிழிலக்கணம் பயின்றார், திருக்குறளை ஊன்றிப் படித்தார். வில்லியம் ஜோன்ஸ், ஜட்ஜ், சமஸ்கிருதம் பயின்று பெரும் புலவரானார். தனித்து டிக்ஷனரி எழுதினார். இன்று வரை சமஸ்கிருதத்திற்குப் பிற மொழியில் உள்ள டிக்ஷனரி அது ஒன்றே. ஓர் ஆங்கிலேயருக்கு வைஸ்ராய் பதவி அளித்தனர். அன்று இங்கிலாந்துப் பிரதமருக்கு £5000 ஆண்டு சம்பளம். வைஸ்ராய்க்கு 1947 வரை £24,000 ஆண்டு வருமானம். அந்த ஆங்கிலேயர் இந்தியாவில் வேதம் படிக்க முடிவு செய்துள்ளதால், வைஸ்ராய் பதவியை ஏற்கவில்லை. ஆங்கிலேயருக்கு ஞானத்தாகம் அதிகம். வேதம் போல் அதைத் தணிக்கும் நூலில்லை. பதஞ்சலி சாஸ்த்திரி சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தார். அவர் எல்லா மாநிலங்களையும் பார்வையிட்டவர். எந்த மாநிலத்திற்குப் போனாலும் அங்குள்ள சமஸ்கிருத பண்டிதர்களை சந்திப்பார். அவர்களை ஸ்லோகங்களைப் பாடச் சொல்லிக் கேட்பார். காஷ்மீர் பண்டிதர் சாஸ்த்திர விற்பன்னர்கள். அவர்கள் பாடுவதையும் கேட்டிருக்கிறார். தமிழ் நாட்டில் பிராமணர் சமஸ்கிருதத்தை தூய்மையாக உச்சரிப்பதாகக் கூறியுள்ளார். உபநிஷதமே மேல் நாட்டார் அதிகமாகப் பயின்றது. எமர்சன் அதைப் பாராட்டுவது போல் நாம் அறிவதில்லை. தத்துவ ஞானம் புதியதாக உலகில் வளர்ந்த காலம் உபநிஷத காலம். இந்த சுலோகங்கள் சுருக்கமானவை, அடர்ந்த ஆழ்ந்த கருத்துள்ளவை. மனத்தின் வீச்சு எட்டியவரை எண்ணம் சஞ்சாரம் செய்ததை எழுத்தில் வடித்தெடுத்த இலக்கியம் உபநிஷதம். உபநிஷதத்தைப் படித்த மேல்நாட்டார் அங்கு எண்ணம் உயர்ந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். The conquerer is conquered என்று ஓர் சொல் சரித்திர ஆசிரியரிடம் வழங்குகிறது. ஆங்கிலேயர் நம் நாட்டை வென்று ஆண்டனர். நம் கலாச்சாரம், ஆன்மீகம் அவர்களை வென்றது. அன்னிபெசண்ட் அம்மையார் அயர்லாந்தில் பிறந்தவர். அவரை அறிந்தவர் இவர் மகாராணியாகப் பிறக்க வேண்டியவர் என்றார்கள். இந்தியா வந்து ஆன்மீகம் பயின்று தியாசாபிகல் சொஸைட்டியில் சேர்ந்து தலைவரானார். இந்திய சுதந்திரப்போராட்டத்தை ஆதரித்து அதில் பங்கு கொண்டார். இந்திய தேசீய காங்கிரஸின் தலைவரானார். அவர் நம் ஆன்மீகத்தை ஏற்றது நம் நாட்டில் ஒர பெரும் புரட்சிகரமான மாறுதல். விவேகானந்தர் சிக்காகோவில் செய்த பிரசங்கம் நாட்டின் மத வழிபாட்டை நிர்ணயிக்கும் மைல் கல்லாக அமைந்தது. நாடு ஆங்கில மோகம் கொண்டு கிறிஸ்த்துவ மத வழிபாட்டை ஏற்கும் மனநிலையில் அன்னிபெசண்ட் அம்மையாரும், சுவாமி விவேகானந்தரும் காப்பாற்றினர் என்ற பகவான் கூறுகிறார். வேதமும், உபநிஷதமும், கீதையும் பிறந்த நாடு என்பது உண்மை. அசோகனும் அக்பரும் ஆண்ட நாடு என்பதும் உண்மை. வங்காளத்தில் பிறந்து கேம்பிரிட்ஜில் வளர்ந்த பகவானும் பாரிசில் பிறந்த அன்னையும் தேர்ந்தெடுத்து வாழ்ந்த மண் புதுவை நகரம், இந்திய நாடு என்பதும் பேருண்மைகள். இன்று நாடு வறுமையில் உழல்கிறது. வெளிநாட்டார் வந்து ஏழ்மையைக் கண்டு பொறுக்க முடியாமல் திரும்புகின்றனர். நாட்டில் சத்தியம், நாணயம், நேர்மை, தூய்மை அடியோடில்லை. ஒழுங்கில்லை, சுத்தமில்லை, நியாயமில்லை. இதுவே நாட்டின் நிலை. 1920 இல் இந்தியர் சிந்திக்கும் திறனை இழந்தனர் என்றார். ஆன்மீக சக்தியை மேல் நாட்டாருக்கு அனுப்பினால் பெற்று அவன் செயலில் அதைத் திறம்பட வெளிப்படுத்துகிறான். இந்தியருக்கு அனுப்பினால், மயக்கமானவனாக இருந்தவன் எழுந்து நின்று நடனமாடி மீண்டும் மயக்கமாக விழுகிறான் “நான் என் நாட்டு மக்களை அறிவேன்” என்று பகவான் கூறுகிறார். “உலக நாடெல்லாம் தாமச குணத்தில் மூழ்கியுள்ளன. இந்தியாவும் அது போலிருக்கிறது” என்றார். பகவான் மனத்தில் எதிர்காலத்தை எப்படிக் கண்டார் என்ற விபரம் அச்சிலில்லை, இங்குமங்கும் சுட்டிக் காட்டியுள்ளார். நாம் செய்யக் கூடியதுண்டு என்று நினைக்கவும் முடியவில்லை

வசந்தா

**Old is gold** பழையது பெரியது என்பதில் அடிப்படையான உண்மையுண்டு. அதனால் பழம் பெரும் விஷயம் என்பதால் மட்டும் ஒன்றை இன்று முழுமையாக ஏற்க முடியாது. ஆழ்ந்த விஷயங்களால் பழையன சிறப்பாகவும் இன்றைய நடைமுறையில் புதியன பொலிவாகவுமிருப்பது உண்மை. நவீன சௌகரியங்களை நாம் பாராட்டுகிறோம். பண்டைய பண்புகளின் உயர்வை அறிவோம். இதைக் கடந்த அறிவுக்குரிய தத்துவார்த்த உண்மையும் உண்டு. மக்களாட்சியானாலும், விஞ்ஞான ஆராய்ச்சி என்றாலும் வேதம் கூறும் ஆன்மீக சத்தியங்களிலும்

1) பண்டைய நோக்கம் பெரியது, பரந்ததாக இருக்கின்றது.
2) அந்நோக்கத்தின் மதிப்பு நாளாவட்டத்தில் குறைந்து விட்டது.
3) அது பழைமைக்குரிய பெருமை.
4) இளைஞர், பெண்கள் சுதந்திரம், தாழ்த்தப்பட்டோர் உரிமை, சமத்துவம் போன்றவற்றுள் புதுமைக்கு புது மெருகுண்டு.

வேத காலம் இயற்கையோடு ஒருமையை இயல்பாக ஏற்றது. ஜாதி, மத பேதம் அந்நாளில் எழவில்லை. அகஸ்தியர் மனைவி லோபமுத்ரா என்பவர் வாழ்க்கை அன்று பெண்களின் உயர்ந்த நிலையை எடுத்துக் காட்டுகிறது. பழைய நாள் பரந்த மனப்பான்மையுடைய நாள். இன்று மக்கள் சம உரிமை ஏராளமாக வளர்ந்தது போல் violence க்கு வீட்டிலிருந்து நாட்டுப் பழக்கம் வரை இடமிருப்பதாகத் தெரியவில்லை. பொறுமைக்கும் நிதானத்திற்கும் பழங்காலம் பொற்காலம் சொல் செறிவானது. இனிமை நிறைந்தது. பிற்கால வேதாந்தம் அவசரப்பட்டு, வேகமாக சாதிக்க, குறுகிய இலட்சியங்களைப் பாராட்டியது. உபநிஷத கால நிதானம் ஓரளவு உலகெங்கும் காணப்பட்டது. *Matter ஜடம்* என்ற அத்தியாயத்தில் பழைய கலாச்சாரங்கள் பூமியைத் தாயாகவும், வானைத் தந்தையாகவும் பாராட்டினர். காலம் மாறும்பொழுது வேகம் அதிகரித்து, பண்பு குறைந்து நோக்கம் சிறியதாவது இயல்பு. பதிமூன்று ஆண்டு வனவாசம் பதிமூன்று நாளில் முடிந்ததைக் கிருஷ்ணன் கூறிய பொழுது தர்மபுத்திரரால் ஏற்க முடியவில்லை. காலத்திற்குரிய சட்டத்தை கடுமையாகப் பின்பற்ற அவர் முடிவு செய்தார். அதனால் வனவாசம் பதிமூன்று ஆண்டாயிற்று.

இந்து மதத்திற்குரிய பெருமையொன்றுண்டு. உலகில் ஓர் மதம் ஏற்பட்டால் அதை அனைவரும் அது வகுக்கப்பட்டது போல் பின்பற்ற வேண்டும். கிருஸ்த்துவ மதத்திலும் இஸ்லாமிலும் இதைக் காணலாம். மனிதன் மன வளர்ச்சியால் வேறுபட்டவன். வேறுபட்ட நிலையை மதம் ஏற்க மாறுபட்ட வழிபாடு தேவை என்ற கருத்து உலகில் பரவலாகக் காணப்படவில்லை. இல்லையெனவும் கூறலாம். அதனால் மக்கள் பெறும் பலன் மிகச் சிறியதாகி விடும். இந்து மதம் அடிப்படையில் ஆன்மீகக் கருவை ஆணித்தரமாக அமைத்து நடைமுறை வழிபாட்டை சிவன், விஷ்ணுவிலிருந்து கணபதி, முருகன் வழி, லக்ஷ்மி, சரஸ்வதி மூலம் காளி, அய்யனார் வரை வகுத்ததால்

அனைவரும் ஓர் உயர்ந்த ஆன்மீக இலட்சியத்தை
அவரவர்க்குரிய பாணியில் வழிபட்டுப் பலன் பெற முடிகிறது.

இதைச் செய்யாவிட்டால் மூட நம்பிக்கை வளர வழி வகுத்ததாகும். வியாச பாரதம் மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டபொழுது மாநில கலாசார சூழலுக்குரியவாறு அமைந்தது. வில்லிபுத்தூரர் பாரதமும், கம்ப இராமாயணமும் மூலத்தைத் தழுவி எழுதப்பட்டவையே தவிர மூலத்தை நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டதல்ல. ஓரளவு அடிப்படையில் சுதந்திர மனப்பான்மையின்றி இது போல் மாற்ற இயலாது.

புத்தர் ஐம்பது மைல் தூரத்தில் வரும்பொழுதும் சாந்தி அவர் வருகையை அறிவிக்கும். ஆன்மீகம் வாழ்வில் மிகப்பெரிய துறை. அதனால் சித்தி பெற்ற மகான்கள் பயன்படுத்திய சித்துகள் ஏராளம்.இன்று நாம் கழைக்கூத்தாடி என்று அழைப்பவரெல்லாம் சித்தி பெற்ற ரிஷிகள். ஆன்மீகம் அளவு கடந்து பெரியது என்றாலும் வாழ்வு அதை விட அளவில் பெரியது. பூரணயோகம் மட்டுமே அவ்வுண்மையைப் பாராட்டுகிறது. வாழ்க்கைக்கு வசதி முக்கியம். ஒருவருக்கு எந்த அறிவு, திறமை, சாஸ்திரம் தெரிந்திருந்தாலும் அவருக்குள்ள வாழ்க்கை வசதிக்கேற்பவே அவருக்கு மரியாதை இருக்கும். அவர் பெற்ற திறமைக்கே மரியாதை அவர் வாழ்வு நிலையைப் பொருத்தது. வருமானமில்லையெனில் அந்தஸ்தில்லை. 1900 வரை எல்லா நாட்டிலும் பண்டிதர்கள், கவிகள், எழுத்தாளர்கள், பாடகர், ஓவியர், சிற்பி என்ற எக்கலைக்கு உரியவரும் ஒரு செல்வரை அணுகி அவர் ஆதரவால் செயல்பட்டார்கள். கல்விச்செல்வம் குழந்தைகட்கு மட்டும் உண்டு என்பது அக்காலம். பள்ளிக்கூடம் இலாபகரமாக நடக்கும் என்ற நிலை வந்தபின் தான் கல்வி உயர்மட்டத்திலும் பரவ ஆரம்பித்தது. கலைக்கு மார்க்கட் வந்தபின் தான் கலைஞர்கட்கு வாழ்வு ஏற்பட்டது. கலை தழைக்க ஆரம்பித்தது. இது வாழ்வைப் பொறுத்தவரை இதுவரை உலகம் கண்ட உண்மை.

வரும் காலத்தில் எந்த துறையும் செழித்து வளர
அந்தத் துறையில் ஆன்மா வெளிவருதல் அவசியம்.

இந்தியா அறிவு, ஞானம், வீரம், அரசியல், சாத்திரங்கள், ஸ்தாபன அமைப்பு, செல்வ வளம் அளவு கடந்து 800 ஆண்டுகட்கு முன் பெற்றிருந்தது. பல நூறு ஆண்டுகளாக அந்நிலை நின்று நிலை பெற்றது. ஐம்பத்து ஆறு தேசங்களாக மண் பிரிந்த நிலை அடிப்படையில் நிலம் ஒன்றுபடாத நிலை. நாடு மேலும் முன்னேற நிலம், மண், territory ஒன்றுபடுதல் அவசியம் என இயற்கையறிந்து ராஜஸூய யாகம் வழி பாரத காலத்திலிருந்து நாட்டை ஒன்றுபடுத்த இயற்கை எடுத்த முயற்சி முழுப்பலன் தராத காரணத்தால், இந்த இலட்சியத்தை அன்னிய படையெடுப்பு மட்டுமே சாதிக்கும் எனத் தேர்ந்து, இயற்கை அன்னியனை அழைத்ததாக பகவான் கூறுகிறார். ஐநூறு ஆண்டுகள் முஸ்லீம்களும் முன்னூறு ஆண்டு ஆங்கிலேயரும் நாட்டை ஆண்ட தன் பலனாக நாடு 1880 இல் ஒன்றுபட்டு விட்டது. 1857இல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் இனி அன்னிய ஆட்சி தேவையில்லை என இந்தியாவின் உள்ளுணர்வு அறிந்ததின் அறிகுறி.

பகவான் 1872 லிலும் அன்னை 1878 லிலும் அவதரித்தனர். இந்தியவில் ஆங்கில மோகம் அளவு கடந்திருந்தது. பகவான் தகப்பனார் மனநிலை அதைப் பிரதிபலித்தது. என்று தணியும் இந்த அடிமையின் மோகம் என புலவர் கொதித்தெழுந்தார். மக்கள் இருண்ட மனநிலை நெஞ்சு பொறுக்குதில்லையே எனப் பாரதியைப் பாட வைத்தது. ஆங்கிலேயன் நாட்டு மண்ணை ஒன்றுபடுத்தினான். ஆங்கில பாடதிட்டத்தை ஏற்படுத்தினான். காங்கிரஸ் தலைவர்கள் அன்னியனை எதிர்க்க உதவிய முக்கிய கருவி நாட்டுத் தலைவர்களுடைய ஆங்கில அறிவு. அன்னியன் கொடுத்த கருவி அன்னியனை எதிர்க்கப் பயன்பட்டது. காந்திஜி, நேரு, பட்டேல், ஜின்னா, லியாகத் அலி, பகவான் ஸ்ரீ அரவிந்தர், சுபாஷ் சந்திர போஸ் போன்ற நாட்டின் பெரும் தலைவர்கள் அனைவரும் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டில் பயின்றவர்கள்.

நாம் நம் நாடான இந்தியா சுதந்திரம் பெற விழைகிறோம். பகவான் அரசியலுக்கு வந்த நாட்களில் ஆங்கிலேயனை அவதார புருஷனாகவும், நடமாடும் தெய்வமாகவும் கருதி அவன் போய் விடுவானோ என பயந்தனர். உலக நாடுகள் தாமச குணத்தில் ஊறிப் போயுள்ளனர் என்று பகவான் கூறும் பொழுது, உலகத்தை நினைத்தால் அவர் எழுதிய நாட்களில் ஐரோப்பா சொர்க்கலோகமாகக் கருதப்பட்டது. London returned என்பது பட்டமாகவே வழங்கியது. எல்லா மகாராஜாக்களும் பெரிய ஜமீன்தார்கள் குடும்பத்துடன் லண்டன் போய் வந்தனர். English Citizen ஆக தம் பிள்ளைகள் வளர வேண்டுமென மனைவியை பிரசவத்திற்கு இலண்டன் அனுப்பினர். படிப்பு இங்கிலாந்தில். நேரு மனைவி கமலா காச நோயுற்றபொழுது ஸ்விட்சர்லாந்தில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். உலகம் எனில் ஐரோப்பா என்ற நினைவு உலகெங்கும் உண்டு. 1938 வரை ஆக்ஸ்போர்டில் அமெரிக்கா என்ற சொல் கேள்விப்படாதது. 1901 முதல் 1950 வரை வழங்கிய இருநூற்று ஐம்பது நோபல் பரிசில் ஒரு சில தவிர மற்றவை ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, மற்ற ஐரோப்பிய நாடுகட்கே தரப்பட்டது. தாகூர், ராமன் இருவரே இந்தியாவில் பெற்றனர். அந்த நிலை 1945க்குப் பின் மாறி இங்கிலாந்திருந்த இடத்தை அமெரிக்கா பெற்றுள்ளது. ரஷ்யா 1917 இல் கம்யூனிஸ்டானதால், அதை எவரும் கணக்கில் சேர்த்துக் கொள்ளவில்லை. மனம் ரஷ்யா, சைனா, ஜப்பான், இந்தியா என்ற சொற்களை அறியாது. ஜப்பான் போர் முடிந்தபின் தொழிலபிவிருத்தியால் பணக்கார நாடாயிற்று. சைனாவை 1972ல் நிக்ஸன் அதன் மார்க்கட்டிற்காக நாடினார். 1980 முதல் ஜனத்தொகையால் இந்தியாவும் சைனாவும் குறைந்த சம்பள ஊழியர்களால் பிரபலமடைந்துள்ளது. உலகத்தையே மனதில் கொண்டு மனித குலத்தை நாம் கருதினால் காலம் காண்பது வேறு. மனித குலத்தைக் கடந்த பூமாதேவிக்கு பகவான் Supreme சுப்ரீம் என்ற புருஷோத்தமனிடம் கேட்ட வரம் கிடைத்து விட்டது.

உண்மை, சரணாகதியால் அது நிறைவேறும் என பகவான் கூறுகிறார். உலகம் பெரியது. ஊர் சிறியது. உலகமும், ஊரும் உள்ளே மனத்தில் உள்ளன என்பது ஆன்மீகம். பொதுப்பார்வைக்கு அமெரிக்க செல்வம், பிரபலம், ஐரோப்பிய நாகரீகம். இந்தியாவின் ஏழ்மையென பல்வேறு தோற்றங்கள் உள்ளன. வேதம் முதல் இன்று ஸ்ரீ அரவிந்தம் வரை மனத்துள் கணக்கெடுத்த பகவான் 1940க்கு முன் ஐந்து இலட்சியங்களைக் கருதினார்.

1. இந்திய விடுதலை.
2. ஆசிய விடுதலை.
3. உலக அரசு
4. இந்தியா ஜகத் குரு
5. சத்திய ஜீவன் அவதாரம்

முதலிரண்டு இலட்சியங்கள் அவர் காலத்திலேயே பூர்த்தியாயின. உலக அரசு ஏற்பட முதல் அறிகுறியாக EU ஏற்பட்டுள்ளது. இந்தியா ஜகத்குருவாக செல்வமும், நாணயமும் இந்தியர் பெற வேண்டும். 1956இல் சத்திய ஜீவியம் புவிக்கு வந்து விட்டதால் கடைசி இலட்சியமும் சமீபத்தில் நிறைவேறுமா என அன்பர்களும், சாதகர்களும் நினைக்கலாம். அது நினைவால் சாதிக்கக் கூடியதில்லை, செயலாலும் அது மனிதனால் முடியாத காரியம். தானே நடக்கட்டும் என்றிருப்பது பகவான் கொள்கையில்லை. இன்று நாம் செய்யக் கூடியது என்று உண்டா என்பது கேள்வி. வேதம் முதல் ஸ்ரீ அரவிந்தம் வரை என்ற கருத்து நமக்குக் கூறுவதொன்றுண்டா? 1930 வாக்கில் பகவான் இந்தியா ஆயுதம் தாங்காமல் சுதந்திரம் பெறும் என்றார். அது உலகம் அறிந்ததில்லை.

இரு போர்களையும் தவிர்க்க பகவான் முயன்ற பொழுது சூட்சும உலகில் கரிய உருவங்கள் கடுமையாக இருப்பதைக் கண்டு, இவற்றை சூட்சும உலகிலேயே வெல்ல இயலாது. அவை போரிட்டு அழிய வேண்டும் என முடிவு செய்தார். போரை Mother's war என்றழைத்தார். இந்தியா ஆயுதம் தாங்காமல் சுதந்திரம் பெற ஐரோப்பிய போர் வெல்லப்பட வேண்டும் என்பதால், பகவான் சர்ச்சில் மூலம் போரை வென்றார். மே 1940 முதல் நவம்பர் வரை Battle of Britain இங்கிலாந்தின் போர் முனை கடுமையாக செயல்பட்டு ஆங்கிலேயனுடைய வீரம், தீரம், தியாகத்தால் வெல்லப்பட்டது. இருநூறு ஆண்டுகள் இந்தியத் தொடர்பு ஆங்கிலேயனுக்கு ஆன்மீக ஆதரவு பெற்றுக் கொடுத்தது.

நமக்கு எந்த கோணமும் புரியாது. உலக நோக்கே அறிவிற்குரியது. பகவான் நோக்கம் பூமியின் பரிணாமம். நாம் அறிவது சமீபகால மகான்கள், வள்ளலார், பட்டினத்தார், அப்பர், சுந்தரர், விவேகானந்தர், இராமானுஜர், சங்கரர், இராம கிருஷ்ண பரமஹம்சர், இரமண மகரிஷி, போன்றவரை நாம் அறிவோம். அவர்களைப் பற்றி தத்துவ ரீதியாக எழுதும் அளவுக்குப் பிரசுரங்களில்லை. இந்தியாவில் ஆசிரமங்கள் வெளியிடுவதில்லை. அப்படியிருந்தால் அவை சிலவாகவேயிருக்கும். ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் பகவானால் ஏற்படுத்தப்பட்டது. இவர் கேம்பிரிட்ஜில் பயின்றவர். 1910 முதல் 1920 இல் அன்னை வரும் வரை எந்த வெளியீடுமில்லை. 1914இல் அன்னை முதலில் வந்தபொழுது ஆர்யா ஆரம்பித்து பகவான், அன்னை, ரிச்சர்ட் எழுதினார்கள். அவர் 1922 இல் முடித்த The Life Divine1940இல் கல்கத்தாவில் பிரசுரிக்கப்பட்டது. அது முதல் 1980 வரை 1000 வெளியீடுகள் வந்துள்ளன. இது எந்த இந்திய ஆசிரமத்திலுமில்லாத அம்சம். நாம் இன்று மகான்களைப் பற்றி எழுத வேண்டுமானால் அது கேள்வி ஞானத்தால் மட்டுமே எழுத முடியும். பகவான்Evening Talks மாலை நேர உரையாடல்களில் அரசியல், வைத்தியம், யோகம், தலைவர்கள், பொது விஷயங்கள், என ஏராளமான விஷயங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார். இது புராணியால் நினைவிலிருந்து எழுதப்பட்டது. சாதகர்கட்குப் பகவான் 20,000 கடிதங்கள் எழுதியுள்ளார். வேத இரகஸ்யம் என்று ஒரு நூலும் உபநிஷதம் என்று மற்றொரு நூலும், கீதைப் பேருரைகள் என்பதும் பகவான் நம் பரம்பரையைப் பற்றி எழுதியவற்றில் பிற மகான்களைப் பற்றிக் கூறியது எனக்குத் தெரியும். அவற்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு நான் எழுதுவதுண்டு. இந்த எல்லையைக் கடந்து என் சொந்த அபிப்பிராயங்களை நான் எழுதுவதில்லை. எழுதினால் அவை என் அபிப்பிராயம் எனக் கூறி விடுவேன். இராமலிங்க சுவாமியைப் பற்றி பகவான் அவருக்கு சத்திய ஜீவியமிருந்தது என்று கூறியபொழுதும் அவர் பெயரைக் குறிப்பிடவில்லை. இப்பகுதியிலிருந்த ஒருவர் என்றே எழுதியுள்ளார்.

மனம் வளர்ந்தது உபநிஷத காலம். அதுவும் ஆரம்ப காலம். பிற்கால வேதாந்தம்rational mind பகுத்தறிவு மிதமிஞ்சிய காலத்தில் intuition திருஷ்டியை அது மீறியபொழுது "எந்த சதஸிலும் நீ என்ன நினைக்கிறாய்" என கேட்பதில்லை. "நீ என்ன கண்டாய்" என்றே கேட்பார்கள். நினைவும், திருஷ்டியும் வேறுபட்டால் நினைவைப் புறக்கணித்து திருஷ்டியை ஏற்றுக் கொள்வார்கள். தவம் வேறு, வாழ்வு வேறு என்று பிரிந்தபின் ஞான காண்டம் ரிஷிகட்கும், கர்ம காண்டம் மக்களுக்கும் என்ற பொதுவான அபிப்பிராயம் ஏற்பட்டது. நால்வகை ஆசிரமங்கள் வலுவிழந்தன. வர்ணாசிரம தர்மம் ஜாதிப் பிரிவினையாயிற்று. பிராமணன் உஞ்ச விருத்தியை ஏற்றுக் கொண்டான். க்ஷத்திரியன் போரை வென்றபின் அரசாளும் திறமையுடையவனுக்கு அதிகாரம் தராமல் தானே அரசனானான். விவசாயம் வியாபாரம் செய்பவர் தம் வருமானத்தை ஊருக்குத் தருவதற்குப் பதிலாக வீட்டிற்கே பயன்படுத்தினர். பத்தன், கருமான், தச்சன், சக்கிலி கூலிக்காரர்களானார்கள். இதைக் கடந்து ஜாதியில் சேராத மக்கள் தொகை பெருகி இன்று 25% உள்ளது பகவான் காலத்தில் 16% ஆக இருந்தது. அவர்கள் ஒரு பெரும் சமூகமாகி அவர்கட்குள் 'ஜாதி'ப்பிரிவினை ஏற்பட்டு இந்திய சமூகம் திசை திரும்பியது. 1915இல் மகாத்மா செய்த ஹரிஜன சேவை அவர் சுதந்திரத்திற்கு செய்ததை விடப் பெரிய சேவை. மகாத்மாவை மகாத்மாவாக உலகம் ஏற்றாலும், ஹரிஜனங்கள் ஏற்றுப் போற்றினாலும் ஹரிஜன் என்ற சொல்லையே அவர்கள் விரும்பவில்லை. அம்பேத்காரைத் தலைவராக ஏற்றனர். இன்று அவர் பெற்ற முன்னேற்றம் அறுபது ஆண்டில் பெரிய சாதனை என்றாலும் நாட்டு நிலையைக் கருதும்பொழுது அது கடலில் கரைந்த பெருங்காயமே. அமெரிக்க நீக்ரோக்கள் போல் நம் நாட்டில் இந்த ஜாதி, தீண்டாமையால், கிருஸ்த்துவ மதமும் முஸ்லீம் மதமும் பரவ உதவியது. சுமார் ஒன்றில் மூன்று பாகம் முஸ்லீம்கள் இந்து மதத்திலிருந்து விரும்பி அம்மதத்தைத் தழுவினர். தீண்டாமையை எதிர்த்து நடந்த மதமாற்றம் அது. பாக்கிஸ்தான் ஏற்பட்ட சமூகக் காரணங்களை ஆராய்ந்தால் அடிப்படையில் உள்ளது இஸ்லாமில்லை. இந்து மத தீண்டாமை என்று புரியும். இதுவரை உலகம் நேரடியாக எதிர்கொள்ளாத பிரச்சினை இது. இந்தியாவில் எந்த அரசியல் கட்சியும் கருதாத மதக்கொள்கை. சுதந்திரம் வந்தபின் இவர்கள் புரட்சி செய்வார்கள் என எதிர்பார்த்தார்கள். இவர்கட்கு முன் ஜாதியுள் கொடுமைக்குள்ளானவர் விழிப்படைந்தனர்.
அது பலதரப்பட்ட சமூக நிலைகள். அவர்கள் ஆர்வமாக முன்னேற முயல்கின்றனர்.

உலக வரலாற்றிலேயே இன்று வரை அசோகர் போல் போரை தானே வலிய கைவிட்டவரில்லை. அது இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டிற்கு முன். போர் வலிமை போர்க்களப் பெருமை. அரச பதவிக்குப் போட்டியை மட்டும் உலகம் அறியும். தகப்பனார், உடன்பிறந்தவரை, மகனைக் கொலை செய்யத் தூண்டும் ஆசை பதவி

ஆசை. பெருமைக்குப் பேர் போன இடம் இங்கிலாந்து. சர்ச்சில் இரண்டாம் முறை பிரதமரானபின் தானே ஈடனுக்காக விலக முன்வந்து வாக்குக் கொடுத்தார். கேட்பதே குறைவு, சொல்லிய சொல்லைக் காப்பாற்றுவதே இலட்சியம் என்ற நாடு அது. சர்ச்சிலாலும் வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை. ஈடனாலும் கேட்காமலிருக்க முடியவில்லை. தினமும் கேட்டார்.

தான் வளர்த்த காங்கிரஸ் பெற்ற சுதந்திரத்தின் பெருமையை
தானே நினைக்காமல் விட்டுக் கொடுத்த பெருமையுள்ள அரசியல்வாதி

உலகிலில்லை. அவருக்குப் பின் அறுபது ஆண்டாக ஒருவர் பிறக்கவில்லை. பதவி vital, போர் physical. இது இந்திய நாட்டின் ஆன்மீகப் பெருமை. இந்தக் கண்ணோட்டத்தில், பரம்பரையாக நாட்டில் அரும்பெரும் பண்புகளைப் பாராட்டிய பெண்கள், சொத்துரிமையைக் கருதாத செல்வந்தர், குருவை மனதாலும், ஆன்மாவாலும் போற்றிய சிஷ்யன், சிஷ்யனைப் போற்றிய குரு, மகளுக்கு எந்த சிறு பதவியும் தர நினைக்காத மகான் ஜவஹர்லால் நேரு, சிறு கதைகள் எழுதும் இளம் உள்ளங்கள் நாட்டில் இன்றைய அவல நிலையிலும் ஏராளமாக உண்டு. அவரே நம் எதிர்காலம். நாடு என்பது ஆத்ம விளக்கம் பெற்ற மனவளமுள்ள மனிதர். எதிர்கால பெரும் பயன் விளைவிக்கும் பேரரங்கமாக விளங்கும் பண்பு பகவான் கூறும் opulent culture. மனித சுபாவம் ஜீன்வல்ஜீனைப் போய் பார்க்கவும் மனமில்லாத கோசட்டிலும், பெர்னாண்டை மணந்த மெர்சடஸிலும், ஒத்தெல்லோ, லேடி மாக்பத்திலும் வெளிப்படுகிறது. அந்த ஆரம்பத்திலிருந்து இப்பெரும் பண்பிற்கு இந்தியா வர முடியும். வேதம் கூறும் பெண் மனித சுபாவம். பகவான் கருத்தை எழுதிய பாரதி அவள் தாளினைக் கைக் கொண்டு மகழ்ந்திருப்பான் என்பது. சுப்ரீம் பூமாதேவிக்கு அளித்த பெரு வரம் sincerity, surrender உண்மையும் சரணாகதியாலும் பூர்த்தியடையும் என்றார். உலகை நன்கறிந்தவர் உலகை வெறுக்கும் மனநிலை cynicalக்கு வருவார். உலகின் உயர்வு மனித சுபாவத்தைக் கடந்த மகிமையையுடையது. மனிதனின் சிறுமை உள்ளது. ஆத்மாவின் பெருமை மனித சிறுமையைக் கடந்தது. அதைப் பாராட்ட மனம் ஆத்மாவின் உயர்வைத் தன்னில் அறிய வேண்டும். இலட்சியமாக செயல்பட சம்பிரதாயங்களை ஒதுக்கி திருமணம் செய்ய விரும்பியவர் நட்பு உறவையும் விலக்கியதை அறிந்த பெரியவர், அதனால் மணமகன் தன்னை திருமணத்திற்கு அழைக்காதபொழுது, "நீங்கள் அழைக்காவிட்டால் நான் வருகிறேன்" என்று கூறும் மனநிலை உயர்ந்த உள்ளத்துடையது. முப்பது வயதைக் கடந்த பெண் தனக்குத் திருமணமாகாவிட்டாலும் பரவாயில்லை தங்கை வாழட்டும் என நினைத்தது நாட்டின் பண்பின் உயர்வைக் குறிக்கிறது. அப்படி நினைத்தவளுக்கு அவளுக்கும், தங்கைக்கும், தம்பிக்கும் பரிசு கிடைத்தது. கொடுத்த பெரும் தொகையை கேட்க முடியாத சிறுவன் சிறுவனில்லை, மிகப் பெரிய உள்ளம் படைத்த உயர்ந்த ஆத்மா. அண்ணனும் தம்பியும் ஒரே பெண்ணை ஒருவரையறியாமல் அடுத்தவர் அணுகுவதை அறிந்த தம்பி, அண்ணனுக்காக தன் காதலைத் தியாகம் செய்து நாட்டை விட்டு ஐரோப்பா போய் அவர்கள் உயிருடன் உள்ளவரை திரும்பவில்லை என்பது டிக்கன்ஸ் எழுதிய நாவல்.

காதல் தியாகத்திற்குரிய பொருளல்ல.
அதையும் தியாகம் செய்யும் மனித உள்ளம் உண்டு.

பக்கம் *410* *The Life Divine*இல் பிரம்மம் தேடும் ஆனந்தம் பேரானந்தம். மறைந்து கண்டு பிடித்து அனுபவிக்கக் கூடியது என்று பகவான் எழுதுவது ஓர் உலக இரகஸ்யம். அது என்ன என்று அறிவதும் யோக சித்தி. பிரிதல் பெரிது. பிரிந்தபின் கூடுதல் பெரும் ஆனந்த நிலையை ஏற்படுத்துவது என்ற கருத்து சிருஷ்டியைக் கடந்த பெரிய நிலை. Synthesis of Yogaவில் பக்கம் *158* இல் சத்திய ஜீவிய மௌனம், அதிலெழும் சத்திய ஜீவிய அன்பு விளக்கப்படுகிறது. அன்பு இணையும்பொழுது உரசல் எழும். உரசல் எழும்பக்கூடியவற்றின் உயர்ந்த பகுதிகள் அன்பால் இணைந்து divine oneness தெய்வீக ஒருமையில் இரண்டறக் கலக்கும் என்ற கருத்து வருகிறது. Inner adoration அந்தரங்கக் காதல் அளவிலேயே என்ற அனுபவம் சைத்திய புருஷனை அழைக்க வல்லது. அழைப்பை ஏற்ற சைத்திய புருஷன் மேல் மனம் வந்து உளமகிழ்ந்து ஆன்மீக உயர்வை சத்திய ஜீவியத்திலும், பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்திலும் எட்டுவது ஆன்மீகப் பரிணாமம் பூரணமாகும் நிலை. நாட்டின் எதிர்காலம் காசு, காசு என்ற மனநிலை விலகி மற்றவர் மனம் இனிக்கும் செயலை விரும்பும் மனிதனிடம் உள்ளது. அன்னை அருளின் பலனை எத்தனை முறை பெற்றாலும் அதன் ஆன்மீகப் பெருமையை அறிய முடிவதில்லை.

மகான்கள் மகத்தான ஆத்மாக்கள். அன்னை கூறுவதை அறிந்தவர் அதைப் பின்பற்ற விரும்பினால் வாழ்க்கை விரக்தியாகும். முனைந்து நின்றால், அவரை விட்டு வாழ்வு விலகும். அல்லது அவரே வாழ்வை விட்டு விலகுவார். அன்பர் மனம் சம்மதப்படாது. அது சம்மதித்தால் அவர் சுபாவம் சம்மதிக்காது. அதுவும் சம்மதம் தெரிவித்தால் ஆண்டவனுக்கே பொறுக்காது என்பது ஆன்மீக சத்தியம். லிங்கன் நாட்டு ஒற்றுமையை அடிமைத்தனத்தை அழித்துக் காப்பாற்ற முனைந்தபொழுது

தன் காபினட்டில் எதிரிகளை நியமித்தார்.
இது அரசியல் யுக்தியில்லை.
வாழ்வு ஆன்மீக உயர்வு பெற மனம் பெற்ற பரந்த நிலை.

அப்பெரு நிலை அவர் இலட்சியத்தை நிறைவேற்றியது. மகாத்மா போல இலட்சியம் பூர்த்தியான பின் லிங்கன் தன் உயிரை இழந்தார். ஷேக்ஸ்பியர் தம் பெரும் கருத்துகளை tragedy சோகக் கதைகள் மூலமே எழுத முடிந்தது. கிருஷ்ண பரமாத்மா தர்மத்தை நிலைநாட்ட தரும புத்திரர் இசையவில்லை. அதர்மம் மூலமே அது நிறைவேறியது. பெண் மானத்தை அரசவையே குலைத்தபொழுது கணவர்கள் கைகட்டி நின்ற நிலையில் பக்தி அவள் மானத்தைக் காப்பாற்றிய நேரம் பாரத யுத்தம் சூட்சுமமாக வெல்லப்பட்டது. எதிரி பொறாமைப்படலாம், கோள் சொல்லலாம், கொட்டினால் தான் தேள் எனலாம். நட்புக்குத் துரோகம் செய்யலாம். ஊரே அவன் பக்கமிருக்கலாம். அவர்கள் நினைவு பலிக்கலாம். அதிலிருந்தும் என்னைக் காப்பாற்றிக் கொள்ள

அவர் குறையை என் வாயால் கூற முடியாது

என்ற மனநிலை கோள் சொல்லியவன் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டான், உடந்தையானவனுக்கு உயிரை விட முக்கியமானவை அடியோடு பறி போயின, தவறு செய்ய மறுத்தவருக்கு ஊரும், உலகமும், உத்தமர்களும், உயர்வைத் தேடிக் குவித்தனர். அம்மனநிலை

காந்திஜீ, லிங்கன் உயிரைக் காப்பாற்றும்.

அந்த நாளில் அது முடியவில்லை. அன்னையின் சூழலில், சத்திய ஜீவிய சூட்சும ஆதரவால் அது தவறாமல் நடக்கிறது, கேட்காமல் நடக்கிறது. உலகம் அதிர்ஷ்டம் பெற விழைந்தால் உலகத்து அதிர்ஷ்டம் அனைத்தையும் உருட்டி திரட்டி உன் வாயிலுக்கு கொண்டு வருவது

வாழ்வு பெற்ற வளம்.

அன்பர் ஆப்பரேஷனுக்குப் போகிறார். “தலைவலி வந்தால் உன் கையை தலையில் வைத்தால் வலி போகும்” என்று அன்னை கூறுவதை நாம் பூரணமாக அறிவதில்லை.*The Life Divine*யை ஒருவர் ஒரு முறை படிப்பது யோகம், இரு முறை படிப்பது யோக சித்தி. “ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் அன்ன சத்திரம் கட்டுவதை விட மேல்” என்றார் புரட்சிக்கவி. எவரையும் அன்னையை ஏற்றுக்கொள்ளக் கேட்கக் கூடாது, அது நடக்காது, முடியாத வேலை. அதை விரும்பும் ஒருவர் அன்னையை அடைய ஒருவரால் உதவி செய்ய முடியுமெனில் அவருக்கு சொர்க்கத்தில் சொந்த இடமுண்டு. அவர் பெயரை ஆயிரம் தரம் சொல்லியவர் kidney stone மறையும் என அவர் அறியார். துரத்துசேவைக்கு பிரம்மாண்டமான பலன் என்பது பலரும் பரவலாக அறியாத ஆன்மீக உண்மை. நாம் கோபதாபங்களைப் பாராட்டுகிறோம். சிறுமை, பெருமை கண்ணுக்குத் தெரிகிறது. அன்னைக்கு அவரவர் ஆன்மீகப் பெருமை அவரறியாவிட்டாலும் முழுவதும் தெரிகிறது. அர்த்தமற்றவர்க்கு செய்யும் அர்த்தமுள்ள உதவியை அலட்சியம் செய்ய அவர் முன்வந்து தொடை தட்டி நின்றாலும் அன்னைக்கு அது record ஆகும். உலகம் பெரியது. வாழ்வு அதனினும் பெரியது. வாழ்வைக் கடந்த ஆன்மாவுக்கு அனைத்தும் பெரிய அம்சம். ஆத்மாவைக் கடந்த பிரம்மம் பிரம்மாண்டம். *The Life Divine* படிப்பது அப்பிரம்மாண்டத்தை உரிமையுடன் பெறுவது. படித்தவர் அறிவதில்லை. அவர் அறியாததால் அநுபவிக்கத் தவறுவதில்லை. ஆப்பரேஷன் செய்யலாம். அதனால் அது தேவையென்றாகாது.

அன்பர் நிலை ஆண்டவனைக் கடந்த அற்புத நிலை.
அவை அன்றாட அற்புதங்கள் என்பது அன்பர் வாழ்வு.

****